| | | |
|---|---|---|
| **O.S No.** | : | 303/2015 |
| **DATE** | : | **02.03.2026** |
| **பெயர்** | : | **தேன்மொழி** |
| **கணவர் பெயர்** | : | **மதிஒளி** |

**பிரதிவாதி தரப்பு வா.சா.1 குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்து என்று குறிப்பிட்டால் என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் என்னவென்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். மேற்சொன்ன சொத்துக்கள் தான் வழக்கு சொத்துக்கள் என்றால் எனக்கு தெரியும்.

2, தாவா சொத்துக்கள் ஆதியில் எனது தாத்தா அப்பாதுரை பெயரில் இருந்தது. அப்பாதுரை பெயரில் உள்ள தாவா சொத்து சம்பந்தமான ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்று சொன்னால் எனது தந்தை இறக்கும் போது என்னிடம் கொடுத்து சென்ற செட்டில்மென்ட் ஆவணம் தான் உள்ளது. தாவா பிராதில் உள்ள விவரங்களை நான்தான் வழக்கறிஞரிடம் தெரிவித்தேன். தாவாவில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும்.

3. அப்பாதுரையின் சுயராஜ்ஜிய சொத்து என்று தாவாவில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு பிராது நான் சொன்ன தகவலின் அடிப்படையில் தான் தயார் செய்யப்பட்டது என்று தெரிவித்துவிட்டு இப்போது பிராதில் இருக்கும் விவரம் தெரியாது என்று சொன்னால் , எது சரியானது அப்பாதுரைக்கு எப்படி பாத்தியப்பட்டது என்ற விவரம் தெரியாது.

4. மேற்சொன்ன அப்பாதுரைக்கு இரு மனைவிகள். அவர்களது பெயர் பட்டாம்மாள்முதல் மனைவி மற்றும் புஷ்பாவதி . பொதுவாக தாத்தாவின் பெயரை பேரனுக்கு வைப்பார்கள் என்றால் சரிதான். எனது கணவரின் பெயர் மதிஒளி.

நான் சொல்லும் அப்பாதுரைக்கும் தாவா சொத்துக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக பெரிய பெயர்களை சுருக்கி அழைப்பது நம் சமுதாயத்தில் வழக்கம் என்று சொன்னால் சரிதான்.

5. தாவா சொத்து ஆதியில் அரசாங்கத்துக்கு சொந்தமானது என்று சொன்னால் சரியல்ல. சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பே ஆதிலட்சுமி என்பவா தாவா சொத்தை ஆக்கிரமித்து அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆதிலட்சுமி அம்மாள் பெயருக்கு 50 ஆண்களுக்கு முன்பே பட்டா எண் 13 தாவா சொத்துக்காக கொடுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

**கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

FANNY RAJAN

Principal District Munsif, Kancheepuram
Digitally signed by FANNY RAJAN